இலட்சிய ஆசிரியர் 2026

“ஆசிரியர் பணியே அறப்பணி
அதற்கே உன்னை அர்ப்பணி”

எனும் வைரவரிகளுக்கேற்ப சிகரத்தைத் தொடுவதற்கு ஏணிகளாகவும், கரைகளை முத்தமிடுவதற்கு தோனிகளாகவும் விளங்கும் ஆசிரியர் சமூகத்தில் நானும் ஓர் அங்கமாக இந்த புனிதமான ஆசிரியர் பணியை அர்ப்பணிப்போடு செய்வதையே எனது வாழ்வின் இலட்சியமாக கொண்டு பணியாற்றுகிறேன் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கற்றதையும் பெற்றதையும் விரித்துரைக்கும் சொல்வன்மைக்கு சொந்தக்காரராக விளங்கும் போதுதான் நல்ல கற்பித்தல் நிகழ்கிறது என்பதை உணர்ந்து, உள்ளார்ந்த நூலறிவும், உலகத்துப் பொது அறிவும் கொண்டு, என் படிப்பறிவாலும், பட்டறிவாலும் மாணவச் செல்வங்களின் வாழ்க்கைக்கான வசந்த வாசல்களைத் திறந்து வைப்பேன், என்பதை ஆணித்தரமாக நம்பிக்கொண்டிருக்கும் சமூகத்திற்கு நான் என் செயல்களால் பதிலளிப்பேன்.

ஒரு மாணவன் எதையெல்லாம் செய்தால் ஒரு நல்ல ஆசிரியரான எனக்கும் பிடிக்கும் என்பதைப் போல, ஒரு ஆசிரியரான நான் எதையெல்லாம் செய்தால் என் மாணவருக்கு பிடிக்கும் என்பதை உணர்ந்து, அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல — பொறுமையுடன் தாயுள்ளத்தோடு நடந்து கொள்ளும் போது, மாணவர்களும் என் மீது பாசத்தை செலுத்தி என் பாடத்தையும் நேசிக்கக் கற்றுக்கொள்கின்றனர்.

ஆசிரியராகிய நான் ஒரு முன்மாதிரியாக, நேர்மறை தேர்வு செய்பவராக, சுய ஒழுக்கத்துடன் தவறுகளை ஒப்புக்கொள்பவராக, நேரம் தவறாமை மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவராக, மற்றவர்களைப் பற்றி நிறைவாகப் பேசுபவராக, வாசித்தல் பழக்கம் கொண்டிருப்பவராக, நம்பிக்கை, மரியாதை குணம், பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு உடையவராக ஒரு நண்பர் அல்லது வழிகாட்டியாக ஒருங்கிணைந்த ஆளுமை மற்றும் சமூகப் பொறியாளராக பல்வேறு பரிமாணங்களில் மிளிர்வதோடு, எம் மாணவர்களையும் அவ்வழியிலே நெறிப்படுத்திக் கொண்டு செல்கிறேன். சமூகம் சார்ந்த அக்கறையுடனான கல்வியையே என் மாணவர்களும் கற்க விழைகின்றனர்.

மாணவச் சமுதாயம் நொடிக்கு நொடி வாழ்வதற்கு விழிப்புணர்வை அதிகரிப்பதும், கவனத்தைத் தீவிரப்படுத்துவதும் அவசியம். நேரத்தை நிர்வகித்து வாழச் செய்தித்தாள்களை முறையாக வாசித்து மொழியைச் சரளமாகக் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழில் ஒரு செய்தித் தாளையும், ஆங்கிலத்தில் ஒரு செய்தித்தாளையும் வாசிக்க வேண்டும். செய்தித்தாளை நெஞ்சத்தில் வைத்துப் போற்று. அதை வாசிக்கும் பழக்கத்தை உன்னில் ஐக்கியமாக்கிக் கொள். அவை உனக்கு அகல்விளக்காக வழிகாட்டும். அறிவு விரியும்போது பகல் பொழுதாகவும் கை கொடுக்கும் என்பதை அவ்வப்போது மாணவர்களின் மனதில் விதையாகத் தூவிக்கொண்டே இருப்பேன்.

“நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்
தான் கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு”

என்ற **ஔவையின்** வரிகளுக்கு வடிவம் கொடுக்க எண்ணி வாசிப்பு பழக்கத்தை தொடர்ந்து செயல்படுத்துவேன். நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் பயன்படுத்தும் முறையையும், புத்தகங்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது பற்றியும் எடுத்துரைத்து பல்வேறு விதமான புத்தகங்களை படிக்கும் ஆர்வத்தை வளர்க்கும் விதமாக இன்றைய தேடல்,

வினாடி வினா, படித்ததும் - கேட்டதும், போன்ற பல்வேறு விளையாட்டுகள் மூலமாக மாணவர்களின் நூலக வாசிப்பை எளிமைப் படுத்துவதோடு அவர்களே புத்தகம் எழுதும் அளவிற்கு அவர்களின் திறனை மேம்படுத்தி மகிழ்கிறேன். வாசிப்பு மாணவர்களின் மனதில் தீய எண்ணங்களை களைந்து, நற்சிந்தனைகளை உருவாக்குவதுடன் உயர்ந்த இலக்குகளை வகுத்துக்கொள்ள உதவுகிறது.

தேசத்தை வலுகாக்க தேசப்பற்றும் அவசியம். எனவே, மாணவர்கள் கல்வியறிவுடன் நாட்டுப்பற்றையும் வளர்த்துக் கொள்ள பள்ளிகளில் ‘தேசிய மாணவர் படை’ என்ற அமைப்பில் இணைய ஊக்கப்படுத்தி அதன் மூலமாக தேசப்பற்றினை ஏற்படுத்துதல், மற்றும் வீரதீர பயிற்சிகளை மேற்கொண்டு இந்தியாவின் வெற்றிக்கு வித்திட வேண்டும். நாட்டு நலப்பணி திட்டத்தில் இணைந்து சமூக அக்கறையுடன் தூய்மைப் பணியில் நகராட்சி பணியாளர்களுக்கு உறுதுணையாக கிராமப்புற மக்களின் சுற்றுப்புற சுகாதாரம் மேம்பட மாணவர்கள் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வழிவகை புரிகிறோம்.

ஒவ்வொரு மாணவர்களுக்குள்ளும் ஒவ்வொரு திறமை இருக்கும். அந்தத் தனித்திறனைக் கண்டறிந்து அவர்களின் திறன்கள் மேம்பட பல்வேறு ஊக்குவிப்பு உத்திகளை கையாண்டு அந்தந்த துறைகளில் அவர்களை மிளிரச்செய்வதே ஒரு ஆசிரியராகிய என் முதல் கடமை என்பதை அறிந்து செயலாற்றுகிறேன்.

“ஒரு ஆசிரியர் மனது வைத்தால்” எப்படிப்பட்ட மாணவரையும் செதுக்கி நல்ல சிலையாக உருவாக்க முடியும். 95% மதிப்பெண் பெரும் மாணவரை 98% மதிப்பெண் வாங்க வைப்பதில் பெருமைகொள்ள ஏதுமில்லை. 20% மதிப்பெண் கூட பெறமுடியாமல் தவிக்கும் மாணவர்களை முறையாக வழிநடத்தி அவர்களை 80% மதிப்பெண் பெறவைப்பதே ஒரு ஆசிரியராக என் சாதனை என்பதில் உறுதியுடன் செயல்படுகிறேன்.

எப்படிப்பட்ட மாணவ சமுதாயம் உருவாக வேண்டுமெனில், காண்போரைச் சொக்கவைக்கின்ற உருவமில்லாமல், கல்லாதவரை சிக்க வைக்கின்ற கர்வம் இல்லாமல், கலையை கல்வியோடு சேர்த்து கற்று, மாண்பின்றி இவ்வுலகில் யாருக்கும் அடிமையாய வாழாது, மானத்தை அடமானம் வைக்காது, பதவிக்காக பிறர்காலில் விழாது, கல்வி நெறி பரப்ப என்றும் மறவாது, மனிதனாக வாழவும், வாய்மை, தூய்மை, ஓய்வில்லா உழைப்பு, உலக அனுபவங்கள் இவையனைத்தையும் பெற்று ஆய்ந்தளந்தாற்றிய தொல்காப்பியம் போல இவ்வுலக சரித்திரங்களை ஆய்ந்தறிந்து தொண்டாற்றும் மாணவ சமுதாயம் உருவாக வேண்டும்.

இவை அனைத்தும் சாத்தியமா? என்ற கேள்விக்கு விடையாக நிற்பது ஊக்கமே! **ஊக்கம்** ஒன்றே ஊன்றுகோலாக இருக்கக்கூடிய அருமருந்து.

“கல்வி எனும் விதை
இதயங்களில் தூவப்படும்போது
செழித்து வளர்வது
தனிமனிதனல்ல! சமுதாயம்!” – எனும் வரிகளுக்கிணங்க ஒரு ஆசிரியராக நான் வளர்த்தெடுப்பது ஒரு தனி மாணவனை அல்ல! ஒரு சமுதாயத்தை! என்பதை மனதில் நிறுத்தி தூவப்பட்ட அனைத்து விதைகளும் மரமாக வளர்ந்து பயன் தருமா? என்றால், நிச்சயமாக தரும். எப்படி மாணவர்கள் எனும் விதைகளைத் தூவி அப்படியே விட்டுவிடாமல் ஊக்கம் எனும் உரத்தை இட்டு, தன்னம்பிக்கை எனும் தண்ணீரை ஊற்றி, அவன் மனதில் உள்ள தயக்கம் மற்றும் அச்சம் எனும் களைகளை

நீக்குவதற்கு ஆசிரியரின் அன்பான, உந்துதலான வார்த்தைகளை வார்ப்பதினால் மாணவச் சமுதாயத்தை செழித்து வளர்த்தெடுப்பேன் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

என் அன்பு மாணவச் செல்வங்களே! கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள், தடைகளிலிருந்து விடுபடுங்கள், வலிமை! அளவற்ற வலிமை! அதுவே இப்போது தேவை... ஆம்...

கன்னங் கருத்த இருட்டின் கரையே, தொங்கும் நரம்பின் தூளே! இதை கேள், மாணவருள் நீ ஒரு மாணவன்! மண்ணன்று! இமை திற, எழுந்து நன்றாய் எண்ணுவாய், தோளை உயர்த்தி சுடர்முகம் மீட்டு, மீசையை முறுக்கி மேலே ஏற்று! விழித்த விழியில் மேதினிக்கு ஒளி செய்! ஏறு... வானம் இடிக்கும் மலைமேல் ஏறு! உம்மில் இருந்து தொடங்கட்டும் ஒரு புதிய விடியல்! விடியலின் நாயகன் நீ! விழித்திரு உன் விடியலைக் கண்டிடு! பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது. சிறுத்தையே வெளியில் வா! எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க! புலியென செயல் செய்ய புறப்படு வெளியே! சிம்பொன் பறவையே சிறகை விரி! எழு!

அக்கினி குஞ்சொன்று கண்டேன்,

அதை அங்கொரு காட்டினில் பொந்திடை வைத்தேன்,

வெந்து தணிந்தது காடு, தனல் வீரத்தில் குஞ்சொன்றும் மூப்பென்றுமுண்டோ! என்ற பாரதியின் அக்கினிக் குஞ்சுகளாய்! வெட்டப்பட்ட மரம் அல்ல நீங்கள்! விதைக்கப்பட்ட விதை என்பதை இவ்வுலகிற்கு உணர்த்து! ஏங்கி நிற்கும் எதிர்காலத் தூண்கள் அல்ல நீங்கள்! நாளைய பாரதத்தை, எதிர்கால இந்தியாவை தாங்கி நிற்கும் தூண்கள் என்பதை இவ்வுலகுக்கு உணர்த்துங்கள்!

விவாதிப்பதைவிட, போதிப்பதைவிட, சாதிப்பதே சாலச்சிறந்தது என்பதை சமூகத்திற்கு பற்பல தொண்டுகள் புரிந்து சாதித்து காட்டு.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டதல்ல வாழ்க்கை!

மரணத்திற்கும் புகழுக்கும் இடைப்பட்டதுதான் வாழ்க்கை! என்பதை உன் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பின் மூலம் நிரூபித்து இவ்வுலகில் சாதனை தடம் பதித்திடு!



ரேணுகா பிரபாகரன். எம்.காம்,எம்.ஏ,பி.எட்.,
தமிழாசிரியர்,
காஞ்சிபுரம்.